**நாகப்பட்டினம் வேளாண்மை இணை இயக்குநர்(பொ) அவர்களின் செயல்முறை ஆணைகள்**
**முன்னிலை: திரு.எஸ்.ஈஸ்வர், எம்.எஸ்ஸி.,(விவ)**

**எண்:அ2/9987/2023** **நாள்: 09.09.2024**

பொருள்: பணிக்குழு - தமிழ்நாடு அமைச்சுப்பணி – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி 4ல் அடங்கிய பணிகள் - நேரடித் தேர்வு 24.07.2022 அன்று நடைபெற்ற போட்டி தேர்வின் மூலம் இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு வேளாண்மைத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது - நியமன ஆணை வழங்கி உத்திரவிடப்பட்டது – நியமனம் செய்யப்பட்ட இளநிலை உதவியாளர் (பிணையமற்றது)களுக்கு பணி வரன்முறை செய்து உத்திரவிடுதல் - தொடர்பாக.

பார்வை:
1. சென்னை, வேளாண்மை ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.அறிபி5/92705/2023, நாள் 08.12.2023
2. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண் அ2/ 9987/2023 நாள் 14.12.2024.
3. சென்னை வேளாண்மை ஆணையர் அவர்களது கடிதம் எண். அபபி5/1000/2024 நாள்: 03.01.2024.
4. இவ்வலுவலக கடித எண் அ2/9987/2023, நாள் 11.01.2024.
5. மயிலாடுதுறை, முதன்மைக்கல்வி அலுவலர் அவர்களது ந.க.எண் 1495/அ4/2024, நாள் 30.08.2024.

**ஆணை:**

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் தொகுதி-4ல் அடங்கிய பணிகளுக்கு நேரடித் தேர்வு 24.07.2022 அன்று நடைபெற்ற போட்டி தேர்வின் மூலம், இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு, பார்வை 1ல் காணும் சென்னை, வேளாண்மை ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி, இம்மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை (2)ல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையின்படி, இம்மாவட்டத்தில் நியமனம் செய்யப்பட்டு, இளநிலை உதவியாளர்(பிணையமற்றது)ஆக பணிபுரிந்து வரும் கீழ்க்காணும் பணியாளரை பார்வை 3ல் காணும் சென்னை வேளாண்மை ஆணையர் அவர்களது கடிதத்தில் காணும் அறிவுரைகளின்படி இப்பணியாளர் பணியில் சேர்ந்த நாள் முதல் இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) பதவியில் பணி வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | தேர்வாணைய வ.எண் | பெயர் / பதவி<br>தற்போது பணிபுரியும் அலுவலகம் | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|
| 1. | 55 | திரு. ஆர்.விக்னேஷ்,<br>இளநிலை உதவியாளர், (பிணையமற்றது)<br>வேளாண்மை இணை இயக்குனர் அலுவலகம்,<br>நாகப்பட்டினம். | 21.12.2023<br>மு.ப | 21.12.2023<br>மு.ப |

இவ்வுத்தரவு, சென்னை மற்றும் மதுரை உயர்நீதி மன்ற கிளைகளில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், தொகுதி IVல் அடங்கிய பணிகளுக்கு பணி நியமனம் தொடர்பாக நிலுவையிலுள்ள வழக்குகளின் தீர்ப்புக்கு உட்பட்டது எனவும் உத்தரவிடப்படுகிறது.

…2…

மேற்கண்டவாறு இப்பணியாளர் பணி வரன்முறை செய்யப்பட்டதைத் தொடர்ந்து, இவர் பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் முதல் முன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டு ஆண்டுகள் தகுதிகாண் பருவத்தில் வைத்தும் உத்தரவிடப்படுகிறது.

ஒம்/- எஸ்.ஈஸ்வர்,
வேளாண்மை இணை இயக்குநர்(பொ),
நாகப்பட்டினம்.

பெறுநர்:
திரு.ஆர்.விக்னேஷ், இளநிலை உதவியாளர்(பிணையமற்றது), இவ்வலுவலகம்.

நகல்:- வேளாண்மை இயக்குனர், சென்னை அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.(அபபி5பிரிவு)
நகல்:- ‘அ2’ இருப்பு கோப்பிற்கு’

// உத்தரவின்படி //
9.9.2024
கண்காணிப்பாளர்

9/9/24